

# ஓங்காரம்

தென்னம்பட்டு ஏகாம்பரம்

இந்து சமயத்தின் வேதாந்த தரிசன நூல்களுள் ஒப்பற்ற ஞானக் கருவூலமாகத் திகழ்பவை உபநிடதங்கள். பொதுவாக அவை 108 உபநிடதங்கள் எனக் கணக்கிடப்பட்டாலும், அவற்றுள் ஈச, கேன, கட, பிரச்சன, முண்டக, மாண்டூக்கிய, ஐதரேய, தைத்தீரிய, சாந்தோக்ய, பிருகதாரண்யக எனும் பத்து உபநிடதங்கள் முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன. இவை தசபோநிடதங்கள் எனவும் அழைக்கப்படுகின்றன. இந்தப் பத்து உபநிடதங்களுக்கும் ஆதிசங்கரர் விளக்கவுரை (பாஷ்யம்) எழுதியுள்ளார் என்பதும் அவற்றின் சிறப்பைக் குறிப்பதாகும்.

இந்தியத் தத்துவ தரிசன நூல்கள் யாவற்றிற்கும் மூல பாடமான உபநிடதங்கள் சொல்லும் பேருண்மை குறித்த சேதிகள் யாவும் மிகவும் உன்னதமானவை. ஆன்மா, பிரம்மம், பிரபஞ்சம் இவை குறித்து உபநிடதங்கள் கூறியவற்றைத் தாண்டி வேறெந்த சாத்திர நூல்களும் புதியனக் கூறியதில்லை. உபநிடதங்கள் கூறியவை யாவும் மெய்ப்பொருள் குறித்து மெய்ம்மை பொங்கித் ததும்பும் மறைபொருள் வார்த்தைகளாகும்.

ஆன்மிக ஞானத்திற்கான பாடங்கள் யாவும் சூத்திரங்கள் போல, வித்துக்கள் போல வினா–விடை வடிவில் சீடன் ஆசாரியர் இவர்களின் உரையாடலாகவே அமைந்துள்ளன. ஆன்ம தேட்டத்தில் உள்ளோர் தீவிர விசாரணையில் இறங்கி உபநிடதங்களை ஊன்றி வாசித்தால், வித்துக்குள்ளே மறைந்திருக்கும் பெரிய ஆல விருட்சத்தைக் காண்பதுபோல, பேசரும் பரம்பொருளின் தரிசனம் விஸ்வரூபமாய் விரிந்துகொண்டே செல்வதைக் காணலாம்.

உபநிடதங்கள் யாவும் பேசும் பெரும்பொருள் யாதெனில் அது ஆன்மா, பிரம்மம், உலகம் எனும் முப்பொருள் உண்மை குறித்ததேயாகும். அவை யாவும் மறைபொருள் குறித்த இரகசிய உபதேசங்களாகவே இருக்கின்றன. சாத்திரப் புலமை மட்டுமே கொண்டு உபநிடதங்கள் கூறும் பிரும்ம ரகசியத்தை அறிந்து கொள்ள முடியாது. அவை யாவும் ஆன்மிகப் புதிர்களாகவே உள்ளன.

உபநிடதங்கள் இம்மண்ணில் தோன்றி ஆயிரமாயிரம் ஆண்டுகள் கடந்தும், இன்றும் புத்தம் புதுமலர் போல உயிர்ப்புடன் இருக்கின்றன. இன்றைக்கும் ஆன்ம தத்துவம் பொங்கித் ததும்பும் புத்தம் புது படைப்பாகவே – இன்னும் அவற்றிலுள்ள புதிர்கள் பொது வெளியில் விடுவிக்கப் படாமலேயே மலர்ச்சியுடன் திகழ்கின்றன.